27—

தேசிய சித்த மருத்துவக் கழகம்

*87528—திரு. ஆ. சுப்புரத்தினம்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய சித்த மருத்துவக் கழகம் (National Institute for Siddha) தமிழகத்திலே அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சென்னை, அறிஞர் அண்ணா இந்திய மருத்துவமனை வளாகத்தில் தேசிய சித்த மருத்துவக் கழகம் அமைக்கும் கருத்துரு இவ்வரசு மற்றும் மத்திய அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயுர்வேதம், யுனானி, ஹோமியோபதி ஆகிய இது போன்ற மருத்துவ முறைகளுக்கெல்லாம், தேசிய அளவில் ஆராய்ச்சி மையங்கள் இருக்கின்றன. ஆனால், தமிழக சிறப்பைப் பறைசாற்றக்கூடிய சித்த மருத்துவத்திற்கு இதுவரையில் தேசிய அளவில் பல்கலைக் கழகம் இல்லை. ஆனால் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஒப்பற்ற அரசு இந்த நல்ல சூழ்நிலையை உணர்ந்து அந்தப் பல்கலைக் கழகத்தை, அந்த மருத்துவ கழகத்தை சென்னையில் அமைக்க வேண்டுமென்று பரிந்துரை செய்ததற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு அது விரைவில், அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நாம் பரிந்துரை செய்தோம். அதற்கு எவ்வளவு தொடர் செலவினம், நிரந்தரமான செலவு எவ்வளவு ஆகும் என்பதையெல்லாம் நாம் பரிந்துரை செய்தோம். அவர்கள் இடம் வேண்டுமென்று கேட்டார்கள். அதையும் கொடுப்பதற்கான ஒப்புதலை அரசு ஏற்றுக்கொண்டது. இப்படி பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து மத்திய அரசுக்கு அனுப்பியபோது மத்திய அரசாங்கம் இதிலே சில

1996 பிப்ரவரி 16]

மாற்றங்களோடு அனுப்பவேண்டுமென்று மீண்டும் திருப்பி அனுப்பினார்கள். அந்த மாற்றத்தையும் செய்து மீண்டும் மத்திய அரசாங்கத்திற்கு நாம் அனுப்பியிருக்கிறோம். விரைவிலே அதற்கு அவர்கள் ஒப்புதல் தருவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

திரு. ஆ. சுப்புரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஹெல்த் பார் ஆல் பை 2000 ஏ.டி.' என்பது மத்திய அரசினுடைய சமீபத்திய கொள்கையாக இருக்கிறது. எனவே அதைப் பயன்படுத்தி இதனை விரைந்து தமிழகத்திலே நிறுவ வேண்டுமென்று மத்திய அரசை நம்முடைய புரட்சித் தலைவியினுடைய அரசு, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கோருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசை நாம் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். ஏறத்தாழ 82½ ஏக்கர் அவர்கள் கேட்டார்கள். அதற்காக நாம் கொடுப்பதாகவும் ஒப்புக்கொண்டிருக்கிறோம். அதுபோக ஏறத்தாழ 142 இலட்சத்தை தொடர் செலவினமாக நாம் ஏற்றுக் கொள்கிற வகையில் ஒப்புதலும் தந்திருக்கிறோம். எனவே, இந்த சித்த மருத்துவக் கழகம் இங்கே வரவேண்டும் என்பதற்காக தமிழக அரசைப் பொறுத்தவரையில் வேண்டுமானாலும் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு அரசு தயாராக இருக்கிறது. மத்திய அரசிடம் மீண்டும் வலியுறுத்தி விரைந்து நடவடிக்கை எடுக்க நம்முடைய அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் வெ. சரோஜா.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய சித்த மருத்துவக் கழகம் தமிழகத்தில் அமைப்பதற்கு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்திருப்பது குறித்து நன்றி தெரிவிக்கும் அதேவேளையில் தமிழகத்தில் அந்த மருத்துவப் பல்கலைக் கழகத்தை ஏற்படுத்தும் போது, சித்த மருத்துவம் பற்றிய அனைத்து ஆராய்ச்சிகளையும் டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப்பல்கலைக்கழகத்தில் இணைக்கும் பொருட்டு அதற்காக கோப்புகளை மாநில அரசு மத்திய அரசுக்கு அனுப்பும்போது அந்த மருத்துவக் கழகம் ஏற்படுத்தும் போது இந்த 'ரிசர்ச் இன்ஸ்டிடியூட்டையும்' அதிலே 'இன்கார்ப்பரேட்' செய்து தற்போதே ஒரே கோப்பாக வருமேயானால் பணியை விரைந்து முடிக்க முடியும். அரசு இதனைப் பரிசீலனை செய்யுமா? என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்திலே இருக்கிற அனைத்து மருத்துவத்

துறைகளும், அது எந்தத் துறையாக இருந்தாலும் சரி, அது எம்.ஜி.ஆர். பல்கலைக் கழகத்திலேதான் இணைக்கப்பட்டிருக்கிறது. இப்போது நாம் இந்த சித்த மருத்துவக் கழகம் அமைப்பதற்காக மத்திய அரசுக்கு பரிந்துரை செய்ததிலே, மத்திய அரசு ஆய்வு செய்து நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆய்வு மையங்கள் அனைத்தும் 'ரிசர்ச் இன்ஸ்டிடியூட்' அனைத்தும் இதிலே சேர்ந்துதான் வரும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அந்த நோக்கத்தோடுதான் இது அமைக்கப்படுகிறது. மேலும் என்ன என்ன புதிய முறைகளை நாம் கடைப்பிடிக்கலாம், இருப்பதை இன்னும் செம்மைபடுத்தவதற்கும், சீர் செய்வதற்கும் என்ன என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் ஆய்வுக் கழகத்திலே நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 28, திரு சி. சுவாமிநாதன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

28—

தரிசு நிலங்களை மேம்படுத்த திட்டம்

* 35472—**திரு. சி. சுவாமிநாதன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, குன்னாண்டார் கோயில் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள தரிசு நிலங்களையும், ஆலங்குடி வட்டத்திலுள்ள தரிசு நிலங்களையும் மேம்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன ?

முற்பகல் 10 -30

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : குன்னாண்டார் கோயில் ஊராட்சி ஒன்றியத்தில் 1992-93 ஆம் ஆண்டில் 50 ஹெக்டேர் பரப்பில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. ஆலங்குடி வட்டத்தில் 1992-93 ஆம் ஆண்டில் 50 ஹெக்டேர் நிலப்பரப்பிலும், 1993-94 ஆம் ஆண்டில் 100 ஹெக்டேர் நிலப்பரப்பிலும் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்